
www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புன்னகையோடு
பொன்னகை வாங்க...

# மோகன் ஜுவல்லறி மாட்

மனங்கவரும் தங்க நகைகளை
மகிழ்வோடு தேர்வு செய்ய...



## MOHAN JEWELLERY MART

201, rue du Fg. St.Denis,
75010 Paris
M°: La Chapelle ou Gare du Nord
**Tél. :01 42 05 65 26**
**Fax: 01 42 05 65 79**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பரிசு PATISU

# 1

சிறுவர் மஞ்சரி

Un magazine pour les enfants

ஆனி 1999

JUIN 1999

ஆசிரியர்:
பத்மா இளங்கோவன்

Rédacteur:
Pathma Elangovan

வெளியீடு:
C D C. EUROPE ORIENT
5, RUE DENFERT ROCHEREAU,
31000 TOULOUSE,
FRANCE.

Tél. : 05 61 63 49 69
05 61 55 00 13

Fax : 05 61 63 49 69

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பரிசு

நிர்வாகி:
வி. ரி. இளங்கோவன்

ஆலோசகர் குழு

க. துரைசிங்கம்
( கல்விப் பணிப்பாளர்–ஓய்வு )

திருமதி கண்மணி தனபாலசிங்கம்
( ஆசிரியர் – ஓய்வு )

திருமதி இரத்தினேஸ்வரி கந்தசாமி
( முன்னாள் ஆசிரியர் )

திருமதி தேவமனோகரி சுரேந்திரன்
( முன்னாள் ஆசிரியர் )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

‘ ஈழநாடு ’ பத்திரிகை ஆசிரியரும், ‘ ரி. ஆர். ரி. ’ தமிழ்ஒலி, தமிழ்ஒளி இயக்குனர் நாயகமுமான திரு எஸ். எஸ். குகநாதன் வழங்கிய வாழ்த்துரை



தலைவர்,
‘ சி. டி. சி. ’
துலூஸ்.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழ்மக்கள் தம்மை அடையாளப்படுத்திடப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுவருவது மகிழ்ச்சிக்குரியது. அதில் முக்கியமானது நம் எதிர்காலச் சந்ததியினரைத் தமிழ் அறிந்தவர்களாகத், தமிழ் உணர்வோடு வளர்த்தெடுப்பதாகும். அதற்கு உதவும்பொருட்டு, தாங்கள் ‘ பரிசு ’ சிறுவர் மஞ்சரியைத் தொடர்ந்து வெளியிடவிருப்பது அறிந்து அகம் மகிழ்கிறேன்.

பத்திரிகை, சஞ்சிகைகளைத் தொடர்ந்து வெளியிடுவதிலுள்ள கஷ்டங்களை நாம் அறிவோம். நீங்கள் தொடங்குவது நல்லதோர் பணி. அதைத் தொடர்ந்து செய்வது பாராட்டுக்குரியது!

‘ பரிசு ’ ஆசிரியரை யான் ஈழத்திலேயே நன்கறிவேன். அங்கு பாடசாலை ஆசிரியராக விளங்கிக் கற்பித்தலில் அனுபவமும், பத்திரிகை, சஞ்சிகைகளுக்குப் படைப்புகள் தந்த ஆற்றலுமிக்கவர். யாழ். ‘ ஈழநாடு ’ நடாத்திய ‘ வெண்பாப் போட்டியில் ’ அவர் பரிசு பெற்றதையும் அறிவேன்.

அவரது பணி ‘ பரிசு ’ மூலம் இங்கும் தொடர மனதார வாழ்த்துகிறேன்.

எஸ். எஸ். குகநாதன்

பாரிஸ்
19—04—1999



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அன்புத் தம்பி, தங்கைகளே!

‘ பரிசு ’ தரும் அக்கா உங்களுடன் தொடர்ந்து பேசவுள்ளேன்.

நீங்கள் சிலர்; புலம்பெயர்ந்து வாழும் நாட்டில் பிறந்திருக்கலாம்
சிலர் ஈழத்தில் பிறந்திருக்கலாம்.

பாடசாலையில், வாழும் நாட்டின் மொழியில் படிக்கிறீர்கள்.
பேசுகிறீர்கள்.
ஆனால் வீட்டில் எந்த மொழியில் பேசுகிறீர்கள்?

நாம் தமிழர்!
நமது அடையாளம் தமிழ்!

தமிழ் பேசுவது வெட்கப்படக்கூடியதல்ல!
தமிழ் பேச முடியாவிட்டால் தான் வெட்கப்பட வேண்டும்.

வாழும் நாட்டில் உங்களுக்குப் பிரசாவுரிமை கிடைத்திருக்கலாம்.
ஆனால் நீங்கள் முழுமையான அந்த நாட்டவர் ஆகிவிட
முடியாது.
உங்கள் தோற்றத்தை மாற்றிட முடியாதல்லவா!

www.tamilarangam.net

தமிழரின் சொந்தப் பூமி அழகானது.

என்றும் சுகமளிக்கும் சுவாத்தியமுடையது.

எல்லா வளமும் நிறைந்தது.

கலை இலக்கியச் சிறப்புடையது.

அந்தப் பூமி சுதந்திரபூமியாகத் திகழ்ந்திட வேண்டும்.

அங்கு தமிழ்மொழி செழித்திட வேண்டும்.

முன்னேறும் மக்கள் சமுதாயத்துடன் தமிழரும் இணைந்திட வேண்டும்.

நீங்கள் வாழும் நாட்டின் உயர்கலைகள் யாவும் கற்றுக்கொள்ளுங்கள்.
விஞ்ஞான வளர்ச்சியோடு இணைந்து உங்களையும் வளர்த்துக்கொள்ளுங்கள்.

தமிழர் சொந்த மண்ணின் வாழ்வுக்கு, வளர்ச்சிக்கு உங்கள் கல்வி, சேவை அவசியம் தேவை!

நீங்கள் வாழும் நாட்டின் மொழியில் நன்கு படியுங்கள். அத்துடன் உங்கள் அடையாளமாம் தமிழையும் படித்திடத் தவறாதீர்கள்!



www.tamilarangam.net

உங்கள் தமிழ்க் கல்விக்கு உதவிடவே ' பரிசு ' தருகிறோம்.

' பரிசு ' தவறாது பெற்றுக்கொள்ளுங்கள்!
படியுங்கள்! புரியாதவற்றைப் பெற்றோரிடம் கேளுங்கள்!
பலருக்கும் அறிமுகப்படுத்துங்கள்!

' பரிசு ' பாதுகாத்துக்கொள்ள வேண்டியது.
என்றும் பலன் தரவல்லது.

உங்கள் ஆர்வத்தைக் காட்டுங்கள்!
'பரிசு'க்கு எழுதுங்கள்!
பலன் பெறுவீர்கள்!



மீண்டும் பேசுவோம்.

*அன்புடன் அக்கா.*

குழந்தைகளைக் காண்பது இனிது
குழந்தைகள் சொற்கேட்பது இனிது
குழந்தைகளோடு இருப்பது இனிது
குழந்தைகளுக்காக உழைப்பதும் இனிதே!





www.tamilarangam.net

# PATISU

## Un magazine pour les enfants.



‘ Mon pays c’est un beau pays’
nous dit le chanteur.
Mais, faut-il un chanteur, pour nous en convaincre?
Tout individu, même le pire des individus, reste attaché à son pays, car il a là ses Racines !
On voit constamment de nos compatriotes qui ont quitté la campagne, pour prendre un exemple, dans l’espoir de trouver en ville ce qu’ils pensent que la campagne ne peut leur donner, y retourner quelques années plus tard, car sans vouloir l’avouer, ils ont la nostalgie de ce coin de pays qui les a vu naître.
Alors, que penser de ces hommes, de ces femmes, de ces enfants, de ces couples, qui se voient obligés de quitter leur pays pour des raisons politiques ou autres, afin de trouver refuge dans un autre pays, qui, même s’il est plus riche, n’en reste pas moins un pays étranger , un pays dont ils ne savent pas s’il saura les accueillir.
Laisser sa terre, sa maison, ses parents, une partie de sa famille, est un déchirement dont on ne peut vraiment parler si on ne l’a vécu.
Regardons à quelques pas de chez nous, au cœur de l’Europe, l’horreur et le malheur que véhiculent ces populations obligées de partir ailleurs.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Quittent-elles la richesse, l'abondance, le confort parfait, non. Et cependant !
Là, les RACINES sont brisées. Or, la plus petite plante vit par des racines. Dès lors, faut-il aussi abandonner et sa langue, et ses coutumes et ses habitudes et se calquer totalement sur la langue, les coutumes, les habitudes du pays d'accueil ?
Non. Tout en acceptant et respectant les règles et les lois qui régissent ce nouveau pays, rien ne s'oppose à ce que l'on maintienne ses propres racines, ses coutumes familiales, sa langue, oui, sa propre langue qui reste le lien le plus fort avec son pays et ceux qui y sont restés.
Ne serait-il pas désastreux de voir ces enfants qui sont partis très jeunes ou même ceux qui sont nés dans le pays d'adoption, ne rien connaître de leur pays, et surtout et avant tout la langue qui est celle de leurs parents ?
Connaître cette langue qui est l'héritage le plus fort, et qui transmet l'essence même du pays, sa philosophie, sa littérature, sa religion, sa politique, et tout ce qui fait qu'un pays est différent d'un autre, est unique.
C'est ce qu'a voulu PATHMA ELANGOVAN, en créant et éditant ce magazine pour enfants, en langue TAMOUL, au nom de PATISU, afin de permettre aux jeunes expatriés de ce pays, qu'ils n'ont pas connu, ou qui l'ayant connu, risquent de l'oublier, un magazine qui sera un lien, et un lien essentiel avec le pays de leurs pères.
Il fallait le faire, il faut poursuivre cette initiative, et nous ne pouvons qu'encourager Pathma Elangovan dans ce sens.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Nous avons tous besoin de retrouver nos racines, tous ces jeunes éloignés de chez eux ont besoin de retrouver les leurs, elles sont l'essentiel de leurs personnalités.
Et qui nous dit qu'un jour, le retour au pays ne sera pas possible ? Nous en sommes persuadés : les hommes changent, les politiques aussi.
Pathma Elangovan, poursuivez. Donnez à vos jeunes compatriotes l'amour de leur pays, ce pays qu'ils ne peuvent réellement connaître qu'au travers de leur langue, le TAMOUL.
Un Fils bien né, peut-il renier ou simplement oublier sa Mère Patrie ?
NON.

- DANGLES Robert,
Secrétaire du ' C D C.'





www.tamilarangam.net



சின்னஞ்சிறு குழந்தைகளே!
உங்களுக்கொரு பெரிய 'பரிசு.'
அது என்னவென்று உங்கள் விழிகள் மலர
ஆச்சரியத்துடன் நீங்கள் கேட்கும் அழகு
எனக்குத் தெரிகிறது.

நீங்களே இந்த உலகிற்குக் கிடைத்த
அழகான 'பரிசு' தானே, ~ ஆயினும்
உங்களுக்கே நாங்கள் 'பரிசு' தருகின்றோம்.
அது என்ன தெரியுமா?
இப்போது உங்கள் கைகளில் தவழும்
இந்தச் சின்னஞ்சிறு புத்தகம் தான்!


www.tamilarangam.net



இதிலே ~
நீங்கள் அம்மா மடியில் தூங்கும்போது
அவள் பாடிய இனிய பாடல்கள் இருக்கும்.
உங்களை மகிழ்ச்சியில் துள்ள வைக்கும்
அழகழகான கதைகள் இருக்கும்.
நீங்கள் நல்லவர்களாக, வல்லவர்களாக
வளர்வதற்கு வேண்டிய அறிவுரைகள் இருக்கும்.

எல்லாம் உங்கள் தாய் மொழியாம் தமிழ்மொழியில்
இருக்கின்றதென்பதே உங்களுக்கு இனிப்பான பரிசு தானே!
இதையெல்லாம் உங்களுக்குத் தேடிப்
பெற்றுத் தருபவர் யார் தெரியுமா...?
உங்களை நேசித்து உங்கள் எதிர்காலம்பற்றிச்
சிந்திக்கும் உங்கள் அன்பு ஆசிரியை
பத்மா இளங்கோவன் அவர்கள்.

உங்களுக்குப் பயன்படக்கூடிய இத்தகைய
ஒரு நல்ல முயற்சிக்கு நாமெல்லாம் சேர்ந்து
அவருக்கு 'நன்றி' சொல்ல வேண்டுமல்லவா.....
நீங்கள் எப்படிச் சொல்லப் போகிறீர்கள்?
'நன்றி' என்று வெறுமனே சொல்லிவிட்டால் போதாது.







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது தாய் மொழியாம் தமிழ் மொழியை
இதன் மூலம் கற்று நீங்கள் எல்லோரும் ~ நாளை
'நாங்கள் எங்கள் தாய் நாட்டினை, தாய் மொழியை
மறக்காத சந்ததிகள்' ~ என்று
வாழ்ந்து காட்டுவீர்களேயானால் ~ அது தான்
நீங்கள் தெரிவிக்கும் நன்றி ... ... பரிசு எல்லாம்!

என்றும் அன்புடன்
ரி. ஆர். ரி. ~ தமிழ் ஒலி
சிறுவர் முற்ற நிகழ்ச்சித்
தயாரிப்பாளர்
*நவா ஜோதி அன்ரி.*





தமிழ் வாழ்ந்தால்
தமிழர் வாழ்வர்!
தமிழர் வாழ்ந்தால்
தமிழ் வாழும்!

www.tamilarangam.net

# விஞ்ஞானி நியூற்றன்

இங்கிலாந்து நாட்டிலே நியூற்றன் என்ற பெயருடைய சிறுவன் ஒருவன் இருந்தான். அவனது தந்தை இறந்துவிடவே, தாயாருடன் வாழ்ந்து வந்தான்.

இளமையில் அவனுக்கு கல்வியில் அதிக நாட்டம் இருக்கவில்லை. பட்டம், காற்றாடி இயந்திரம் ஆகியவற்றைச் செய்து விளையாடினான். அத்துடன் சித்திரங்களும் நன்றாக வரைந்தான்.

அவனது தாயாரிடம் தோட்டம் ஒன்று இருந்தது. அங்கு வேலை செய்யவும் அவனுக்கு விருப்பமில்லை. எனவே, அவனது தாயார் அவனை மேற்படிப்புக்கு அனுப்பினார்.



www.tamilarangam.net

வளர்ந்துவிட்ட நியூற்றன் மேற்படிப்பில் கணிதத்தை விரும்பிக் கற்றார்.

அவர் விடுமுறையில் வீட்டிற்கு வந்தபோது, ஒரு நாள் தோட்டத்திற்குச் சென்றார். வெயில் கடுமையாக இருந்ததால், அங்கே அப்பிள் மரம் ஒன்றின் நிழலில் படுத்தார். அப்பொழுது, அப்பிள் பழம் ஒன்று அவரது தலையில் விழுந்தது.

அவர் சிந்திக்கத் தொடங்கினார்.
'இந்த அப்பிள் பழம் ஏன் கீழே விழுந்தது, மேலே


போயிருக்கலாமே, இது எவ்வாறு நிகழ்கிறது' - என்று அவர் யோசித்தார்.
இதற்குக் காரணம் பூமியின் ஈர்ப்புச் சக்தியே என்பதைக் கண்டுபிடித்தார்.

இந்தக் கண்டுபிடிப்பினாலே விஞ்ஞானம் வளர்ந்தது. அவர் சேர் ஐசாக் நியூற்றன் என்று புகழ் பெற்றார். பெரிய விஞ்ஞானி ஆனார்.

பிள்ளைகளே, நியூற்றனின் சிந்தனையால் கிடைத்த பரிசைப் பார்த்தீர்களா?
நாமும் அவ்வாறு சிந்திக்கப் பழக வேண்டும்.
எல்லாவற்றையும் ஏன், எதற்கு, எவ்வாறு என ஆராய வேண்டும். அப்படிச் செய்தால் நாமும் முன்னேறலாம். பரிசும் புகழும் பெறலாம்.

www.tamilarangam.net

## அறிந்துகொள்வோம்:




### பிரான்சு

பிரான்சு ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஒரு நாடாகும்.

இந்த நாட்டின் தலைநகரம் பரிசு.

இந்நாட்டின் தேசிய மொழி பிரெஞ்சு மொழியாகும்.

பிரான்சு நாட்டினுடைய ஜனாதிபதியின் பெயர் திரு ஜக் சிராக்.

இந்நாட்டினுடைய பிரதம மந்திரியின் பெயர் திரு லியோனல் ஜொஸ்பன்.

பிரான்சு பாராளுமன்றத்தில் 577 அங்கத்தவர்கள் உள்ளனர்.

பிரான்சின் தேசிய தினம் ஆடி 14-ம் திகதியாகும்.

பிரான்சு கைத்தொழில், விவசாயத்தில் வளர்ச்சியடைந்த நாடாகும்.

பாரிசில் உள்ள உயர்ந்த கோபுரம் உலகப் புகழ்பெற்றதாகும்.

www.tamilarangam.net


☐ உங்கள் வீட்டுக்குத் தேவையான
தரம்மிக்க மளிகைப் பொருட்களை
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
பாரிஸ் மாநகரில்...

# நியூ சப்பல் ஸ்ரோர்ஸ்

☐ இலங்கை, இந்தியாவிலிருந்து
நேரடியாக இறக்குமதிசெய்யப்பட்ட
மரக்கறி, கடல்உணவு வகைகள்
மற்றும் மளிகைப் பொருட்கள்
யாவற்றையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள...

# NEW CHAPELLE STORES

**214, rue du Faubourg St. Denis**
**75010 Paris.**

M° : La Chapelle — **Tél.: 01 40 36 20 35**
Gare du Nord — **Fax: 01 48 41 45 89**

www.tamilarangam.net

# திருக்குறளின் பெருமை

உலகிலே, தமிழ் மொழிக்கு அழகும் புகழும் சேர்த்தது திருக்குறளாகும்.
தமிழ் இனத்திற்கு ஒப்பற்ற சிறப்பும் பெருமையும் சேர்த்தது.
பழந்தமிழ்ப் புலவர் முதல் தற்காலப் படைப்பாளி வரை அனைவரையும் கவர்ந்தது.
பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறப்புடையது.
மேனாட்டு அறிஞர் பலரின் போற்றுதலுக்கு உரித்தானது.

இந்தியாவில் பதினான்கு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
சீனம், ஜப்பானியம், மலாய், பர்மியம், சிங்களம், பிஜி, அரபு ஆகிய ஏழு ஆசிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இலத்தீன், ஆங்கிலம், பிரெஞ்சு, ருஷ்யன், போலிஷ், ஸ்வீடிஷ், இத்தாலியம், டச்சு, செக், ஜெர்மானியம், ஆர்மீனியன், பினிஷ் ஆகிய பன்னிரெண்டு ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இந்திய மண்ணில் மலர்ந்த வேறு எந்த ஒரு இலக்கிய நூலுக்கும் இத்தகைய சிறப்பு வாய்த்ததே இல்லை.

www.tamilarangam.net

## திருக்குறளின் வேறு பெயர்கள்

முப்பால், முப்பானூல், உத்தரவேதம்,
தெய்வநூல், பொய்யாமொழி,
வாயுறை வாழ்த்து, தமிழ்மறை,
பொதுமறை.

## திருவள்ளுவரின் வேறு பெயர்கள்



நாயனார், தேவர், முதற்பாவலர்,
தெய்வப் புலவர், நான்முகனார்,
மாதானுபங்கி, செந்நாப்போதார்,
பெருநாவலர், பொய்யாமொழியார்.

## திருக்குறள்

**கல்வி**

கற்க, கசடுஅறக் கற்பவை கற்றபின்,
நிற்க, அதற்குத் தக.

கற்க வேண்டிய நூல்களைக், குற்றம் இன்றிக் கற்க வேண்டும். அவ்வாறு ஆழ்ந்து கற்றபின், அக்கல்விக்கு ஏற்ப, வாழ்ந்துகாட்ட வேண்டும்.

www.tamilarangam.net

**எண் என்ப, ஏனை எழுத்து என்ப, இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு.**

அறிவு அடிப்படையில், எண்ணால் இயங்கும் கணிதக் கலைகளும், உணர்ச்சி அடிப்படையில், எழுத்தால் இயங்கும் இலக்கியக் கலைகளும் உயிர்வாழும் மக்களுக்கு அமைய வேண்டிய இருபெரும் கண்களாகும்.

**கண் உடையர் என்பவர் கற்றோர், முகத்து இரண்டு
புண்உடையர், கல்லாதவர்.**

இத்தகைய கலைகளைக் கற்றவர்களே, உண்மையான கண்களைப் பெற்றவர்கள் ஆவர். கல்லாதவர்கள், முகத்திலே தென்படுபவையோ கண்களல்ல உண்மையில் புண்களே ஆகும்.

---

# K. M. S. SHOPPING CENTER

**( Produits Alimentaires de l'Inde et du Sri Lanka )**

**துலூஸ் மாநகரில் உங்கள் அபிமான
பல்பொருள் களஞ்சியம்.**

**K. M. S. SHOPPING CENTER**
**43, rue des Sept-Troubadours**
( Place Bachelier )
**31000 Toulouse.**

**Tél. : 05 61 63 62 10**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net


# சிவாசினி வீடியோ

☐ நீங்கள் விரும்பும் பழைய, புதிய பாடல்கள் அடங்கிய ஓடியோ, வீடியோப் பிரதிகள், சி. டி. க்கள்...

☐ உங்கள் மனங்கவர்ந்த பழைய, புதிய படங்களின் வீடியோப் பிரதிகள்...

அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள... ...



**SIVASHINI VIDEO**

**210, rue du Faubourg St. Denis**
**75010 Paris.**

M° : **La Chapelle** **Tél. : 01 42 09 23 59**
Gare du Nord 06 14 61 69 84

www.tamilarangam.net





## தாய் மனங் குளிர...


தாய் மண்ணைப் பிரிந்த
தமிழ் பேசும் சிறார்களே,
வீடிழந்து நாடிழந்து
விழிகளிலே நீர் சுமந்து
வீதிகளில் அலையுண்டு
வழியற்ற நிலைகண்டு
அகதியென்ற பேரெடுத்து
அடைக்கலம் புகுந்தவர் நாம்!

சேயாக எமையெடுத்து
சீராட்டும் அந்நியப் பெண்
தாயாக எமைச் சுமந்து
தாலாட்டுப் பாடுகின்றாள்?

தாய் மனங் குளிர்ந்திட
தமிழ் மணம் கமழ்ந்திட
தக்க நல்ல சான்றோராய்
தகமைசேர் அறிஞர்களாய்
தரணியோர் போற்றி நிற்க
தலைசாயா தமிழர்களாய்
தலைநிமிர்ந்து நீர்நடக்க
தரணியே சிலிர்க்க வேண்டும்!

- *அசலை,*

www.tamilarangam.net




## தொலைக்காட்சி

இன்று மனிதனுக்குப் பயன்படும் நவீன விஞ்ஞான சாதனங்கள் யாவும் மனிதனது வாழ்க்கையை இலகுபடுத்தியுள்ளன.
அவனது வாழ்க்கையை வளப்படுத்தியுள்ளதுடன், உலகையே மிக மிகச் சுருக்கி வைத்துள்ளன.

எங்கோ தொலை தூரங்களில் நடக்கும் நிகழ்வுகளை எல்லாம் அதே நேரத்தில் நாம் இருந்த இடத்திலிருந்தே பார்க்க முடிகிறது.
கலை நிகழ்ச்சிகள், கல்வி, விளையாட்டு, அரசியல், இயற்கை அழிவுகள், யுத்தங்களின் பாதிப்புகள், அவலங்கள் எனப் பல்வேறு நிகழ்வுகளை எம் கண்முன்னே உடனுக்குடன் தருகிறது தொலைக்காட்சி.
இது இன்றைய மனிதனுக்கு அவசியமானதாகிவிட்டது.


மனிதனுடைய பொது அறிவை வேகமாக வளர்த்துச் செல்கிறது தொலைக்காட்சி.
வியாபாரத் துறையினர்க்கு இது செய்யும் சேவை மிகப் பெரிது.



www.tamilarangam.net

மாணவர்கள் தொலைக்காட்சியிலிருந்து கற்றுக்கொள்ள எவ்வளவோ அறிவுபூர்வமான விடயங்கள் உள்ளன. விஞ்ஞான வளர்ச்சி, தொழில்நுட்பம், அரசியல், கலை நிகழ்வுகள், உயிரினங்களின் வாழ்க்கை முறை, மனித வரலாறு, நாளாந்த பல்வேறு நிகழ்வுகள், சினிமா எனத் தொலைக்காட்சிச் சேவை பயனுடையது.

தமிழ் பேசும் சிறார்களே, தொலைக்காட்சிச் சேவையை உங்கள் அறிவு விருத்திக்குப் பயன்படுத்தி உங்கள் வாழ்க்கையை வளப்படுத்துங்கள்.






துள்ளும் இளஞ்சிறார்களோடு - கொஞ்சும்
துலூஸ் மாநகர மேயர்
திரு டொமினிக் பௌடிஸ்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# அகில்

எஸ். ஏ. ஆர். எல்.

- □ திருமணப் பட்டுப்புடவைகள்
- □ நவநாகரிக புடவை வகைகள், பஞ்சாபி - சுடிதார்
- □ சிறுவர்க்கான இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், அமெரிக்கா நாடுகளினது நவீன ரெடிமேட் உடுப்புகள்
- □ மற்றும் பரதநாட்டியத்திற்கான உடுப்புகள், அணிகலன்கள் யாவற்றிற்கும்... ...



## அகில் எஸ். ஏ. ஆர். எல்.

( 15 வருட அனுபவம் மிக்கவர்கள் )

# AKIL S. A. R. L.

**189, rue du Faubourg St. Denis**
**75010 Paris.**

M° : Gare du Nord
La Chapelle

**Tél. : 01 42 09 89 33**
**Fax : 01 42 09 89 44**

www.tamilarangam.net

# ஔவைப் பாட்டியின்
# ஆத்திசூடி



## காப்பு

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

ஆத்திசூடி - திருவாத்திப்பூ மாலையை அணிந்த சிவபெருமான், அமர்ந்த தேவனை - விரும்பிய பிள்ளையாகிய விநாயகக் கடவுளை, ஏத்தி ஏத்தி - துதித்துத் துதித்து, யாம் தொழுவோம் - நாங்கள் வணங்குவோமாக.

1. அறஞ் செய விரும்பு.

அறம் - தருமத்தை, செய - செய்ய, விரும்பு - விரும்புவாயாக.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2. ஆறுவது சினம்.

ஆறுவது - ஆற்றிக் கொள்ள வேண்டியது,
சினம் - கோபமேயாகும். ( கோபத்தை அடக்கு ).

3. இயல்வது கரவேல்.

இயல்வது - உன்னால் உதவக் கூடிய தொன்றை,
கரவேல் - உதவாது ஒளிக்காதே.

4. ஈவது விலக்கேல்

ஈவது - பிறர் கொடுப்பதை, விலக்கேல் - தடுக்க முயலாதே.

5. உடையது விளம்பேல்.

உடையது - மறைக்கவேண்டியுள்ள இரகசியத்தை,
விளம்பேல் - பிறரிடம் சொல்லாதே.

6. ஊக்கமது கைவிடேல்.

ஊக்கமது - விடாமுயற்சியை
கைவிடேல் - கைவிட்டு விடாதே.

7. எண் எழுத்து இகழேல்.

எண் எழுத்து - கணித, இலக்கண இலக்கிய நூல்களை
இகழேல் - கற்பதற்குப் பின்நிற்காதே.

8. ஏற்பது இகழ்ச்சி.

ஏற்பது - பிச்சையெடுப்பது
இகழ்ச்சி - மிக இழிவான செயலாகும்.

9. ஐயம் இட்டுண்.

www.tamilarangam.net

ஐயம் – ( இரந்து வருவோர்க்குப் ) பிச்சை
இட்டு உண் – முதலிற் கொடுத்துப் பின்னரே நீ உணவு உண்.

## 10. ஒப்புரவு ஒழுகு.

ஒப்புரவு – உலக நடைமுறையை ( அறிந்து )
ஒழுகு – நீயும் அதற்கமைய நடந்து கொள்.

## 11. ஓதுவது ஒழியேல்.

ஓதுவது – கல்வி கற்கும் வழக்கத்தை
ஒழியேல் – கைவிட்டு விடாதே.

## 12. ஔவியம் பேசேல்.

ஔவியம் – பொறாமை காரணமாக, வஞ்சனை நிறைந்த வார்த்தைகளை
பேசேல் – ஒருபோதும் நீ பேசாதே.

## 13. அஃகம் சுருக்கேல்.

அஃகம் – தானியங்களை ( விளைவிப்பதை )
சுருக்கேல் – குறைத்துக் கொள்ளாதே.
( அளந்து கொடுக்கும்போது அளவைக் குறைக்காதே என்றும் கூறலாம். )



நாம் தமிழர்.

நமது அடையாளம் தமிழ்.

www.tamilarangam.net


# ASIA ENTERPRISE
## ( NEW ASIA MARKET )

- இலங்கை இந்திய மரக்கறி வகைகள்
- கடல் உணவு வகைகள்
- சுத்தமான, தரமான மளிகைப் பொருட்கள்
- தமிழ், சிங்கள ஓடியோ, வீடியோ, சி. டி. வகைகள் யாவற்றிற்கும்... ...

# ASIA ENTERPRISE
## ( NEW ASIA MARKET )

230, rue du Fg. St. Denis,
75010 Paris.

M° : La Chapelle    **Tél.: 01 40 34 66 80**
Gare du Nord    **Fax: 01 40 34 69 78**

www.tamilarangam.net



## பள்ளி செல்வோம்!

பள்ளி செல்வோம் தோழரே
படிக்கச் செல்வோம் நாங்களே
துள்ளி ஓடித் தோழரே
தேடிச் செல்வோம் பள்ளியே,

ஆடிப் பாடி ஆசையாய்
அன்புத் தோழர் நாங்களே
கூடி ஒன்றாய்க் கற்கவே
கூடும் இடம் பள்ளியே,

பந்து அடித்து ஆடுவோம்
பாய்ந்து குதித்து ஓடுவோம்
வந்து ஒன்றாய்க் கூடுவோம்
வகுப்பில் அறிவைத் தேடுவோம்,

www.tamilarangam.net

வகுப்பு அறையில் ஆசிரியர்
விளக்கி வைக்கும் பாடங்கள்
அகத் திரையில் எங்களுக்கு
அழிந் திடாத ஓவியமே,

ஆசிரியர் சொல் மதித்து
அறிவினையே நாம் பெற்று
காசினியே வாழ்த்தி நிற்க
கற்போமே பள்ளி சென்று,

நாளை உயர்ந்த மனிதனாய்
நல்ல பணிகள் செய்திட
வேளை இதுவே கற்றிட
விரைந்து செல்வோம் பள்ளியே,

அன்பு நிறைந்த ஆசிரியர்
அணைத்து நிற்கும் தோழர்கள்
என்றும் நெஞ்சில் நிறைகின்ற
இனிய பள்ளி மறப்போமா?

- *அசலை*

புலம்பெயர் தமிழனின் சாதனை!

பார்க்கிறீர்களா?

தமிழ் ஒளி

கேட்கிறீர்களா?

தமிழ் ஒலி

உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின்
இதயம் கவர்ந்த சேவை




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏமாந்த கொக்கு

கொக்கு ஒன்று கடலை நோக்கிப் பறந்து வந்தது.
அதற்குக் கடும் பசி. வயிற்றைக் கிள்ளியது.
கடலின் மத்தியில் கற்பாறை ஒன்றின்மேல் உட்கார்ந்தது.
மீன் வருமென்று ஆவலோடு எதிர்பார்த்து இருந்தது.



நெடுநேரம் ஆகிவிட்டது. ஒரு மீனும் அகப்படவில்லை.
கடைசி நேரத்தில் மீன் ஒன்று வந்தது.
அந்த மீனைக் கௌவிப் பிடித்துக் கொண்டது.

www.tamilarangam.net



அப்பொழுது அதைத் தொடர்ந்து இன்னொரு மீனும் வந்தது. அதைக் கண்டதும் தனது வாயில் மீன் இருப்பதை மறந்து அதையும் பிடிப்பதற்காகக் குனிந்து வாயைத் திறந்தது. வாயில் இருந்த மீன் தண்ணீரினுள் விழுந்து ஓடிவிட்டது.



மற்ற மீனும் அகப் படவில்லை. கொக்கு வெட்கத்துடனும் துக்கத்துடனும் பறந்து சென்றது.

கிடைத்த பொருளோடு மனம் திருப்திப்பட்டால் துன்பமே இல்லை.

"போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து".

– த. து.

www.tamilarangam.net





## மியா மியா பூனையார்

மியா மியா பூனையார்
மிக்க அழகுப் பூனையார்
சின்னக் காதை ஆட்டியே
சிறிய அசைவும் கேட்பாரே!

கண் இரண்டும் வட்டமாம்
கடும் இருட்டில் மின்னுமாம்
நான் வளர்க்கும் பூனையார்
நல்ல வெள்ளைப் பூனையார்,

பாலை விரும்பிக் குடிப்பாரே
பதுங்கி எலியைப் பிடிப்பாரே
பஞ்சு போல மென்மையே
பார்க்க ஆசை பெருகுமே,



www.tamilarangam.net



பந்தை உருட்டி ஓடுவார்
பக்கம் வந்தே தூங்குவார்
வந்து காலை நக்குவார்
வாலைச் சுழற்றிக் குந்துவார்,

மரத்தின் மேலே ஏறுவார்
மெல்லக் குதித்து இறங்குவார்
குரங்கு போலும் தாவுவார்
குழந்தை போலும் கத்துவார்,

கோபம் வந்தால் சீறுவார்
கொதியில் நகத்தால் கீறுவார்
பார்த்து இருந்து பாய்வதில்
புலிக்குத் தம்பி இவரல்லோ!



– அசலை

www.tamilarangam.net

## நல்ல பழக்க வழக்கங்களை கடைப்பிடியுங்கள்!


- ☐ காலையில் படுக்கையைவிட்டு எழுந்திரு.
- ☐ மலம் சலம் கழித்திடு.
- ☐ பற்களை நன்கு விளக்கி, உடலைச் சுத்தம் செய்.
- ☐ தலையை வாரி இழு.
- ☐ காலை உணவை உண்.
- ☐ சுவாத்தியத்திற்கு ஏற்ற சுத்தமான ஆடைகளை அணி.
- ☐ பாடசாலைக்கு குறித்த நேரத்திற்குச் செல்.
- ☐ வழியில; வீதி ஒழுங்குகளைக் கவனித்துச் செல்
- ☐ பாடசாலையில் பாடங்களைக் கவனத்தோடு படி.
- ☐ எல்லோரிடத்திலும் அன்பாய் பழகு.
- ☐ மாலையில் நேரம் கிடைக்கும்போது விளையாடு.
- ☐ உடலைச் சுத்தம் செய்துவிட்டுப் பாடங்களைப் படி.
- ☐ இரவில் வேளையோடு நித்திரைக்குச் செல்.

www.tamilarangam.net

# தங்கமாளிகை

- உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு
  தற்கால நாகரிக வடிவத்தில்
  தரமான தங்கநகைகளைத் தெரிவுசெய்ய,
- உங்கள் வேண்டுகோள்படி, சகலவிதமான
  தங்கநகைகளையும் குறித்த நாட்களில்
  செய்து பெற்றுக்கொள்ள,
- மற்றும் அழகுசாதனப் பொருட்கள்,
  அன்பளிப்புப் பொருட்கள்
  அனைத்திற்கும்... ...





# THANGAMALIKAI

**199, rue du Faubourg St. Denis**
**75010 Paris.**

M° : La Chapelle **Phone : 01 42 05 39 05**
**Fax : 01 42 05 39 06**

www.tamilarangam.net

# பிள்ளைகளுக்கான பத்துக் கேள்விகள்

( சரியான விடைகளை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலிக்கு ஒரு மாதப் ' பரிசு ' கிடைக்கும். )

1. பிரான்சு நாட்டுப் பிரதம மந்திரியின் முழுப்பெயர் என்ன?

2. தேம்ஸ் நதி எந்நாட்டில் உள்ளது?

3. ஐக்கிய அமெரிக்காவின் தலைநகரம் எது?

4. வானவில்லில் எத்தனை நிறங்கள் உள்ளன?

5. ' சங்கிலியன் தோப்பு ' எந்த நகரத்தில் உள்ளது?

6. உலகின் மிகப்பெரிய பாலைவனம் எது?

7. பிரான்சின் ' செவாலியர் ' பரிசு பெற்ற சிறந்த தமிழ்ச் சினிமா நடிகர் யார்?

8. தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார்?

9. சந்திரனில் காலடி வைத்த முதல் மனிதன் யார்?

10. ஈழத்து எழுத்தாளர் ஒருவர் பெயர் கூறுக?

**( உங்கள் விடைகளை இம்மாத முடிவிற்குள் அனுப்பிவைக்கவும். )**

www.tamilarangam.net





**குத்துவிளக்கு**

எல்லா இடத்திற்கும் ஒளிதரும் குத்துவிளக்கு.

அது தனக்கு அடியில் நிழலோடு இருக்கிறது.

பெரியோர் தமக்கென்று எதையும் தேடிக்கொள்வதில்லை.

!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!



www.tamilarangam.net



பனைமரம்

இது ஒரு பனைமரம்.

பனையிலிருந்து அதிக பயன் பெறலாம்.

இதனைக் கற்பகதரு என்றும் கூறுவர்.

எமது தாய்நாட்டில் பனை அதிகம் உண்டு.

பனைமரம் வைரமானதாகும்.



www.tamilarangam.net

# சித்திரச் சோலை

சின்னஞ்சிறு சித்திரங்களே, சிறார்களே,

' பரிசு ' சித்திரச் சோலையில் இணைந்துகொள்ளுங்கள்!

உங்கள் முகவரி, வயது, பொழுதுபோக்கு என்பனவற்றைக் குறிப்பிட்டு எழுதுங்கள். அத்துடன் உங்கள் படமும், விரும்பினால் குடும்பப் படமும் சேர்த்து அனுப்பிவையுங்கள்.
அவை ' சித்திரச் சோலையில் ' தவறாது பிரசுரமாகும் .

உங்கள் ஆக்கங்களையும் அனுப்ப மறக்க வேண்டாம்.

- உங்கள் பிறந்த நாட்களைக் குறிப்பிட்டு எழுதினால், ' பரிசு ' உங்கள் படத்தோடு வாழ்த்துக்களையும் பிரசுரிக்கத் தவறாது.



www.tamilarangam.net



# சித்திரச்சோலை மலர்கள்



செல்வி நந்தகுமாரன் துளசிகா
Schwelm, Germany.
வயது: ஆறு
பொழுதுபோக்கு:
கதை கேட்பது,
தமிழ் ஒலி கேட்பது,
படம் கீறுதல்.

www.tamilarangam.net

செல்வி சிவநாதன் சிவதர்ஷா
Toulouse, France.
வயது: பதின்மூன்று
பொழுதுபோக்கு:
கதை படித்தல்,
தமிழ் ஒளி பார்த்தல்,
பிரெஞ்சுத் தொலைக்காட்சி பார்த்தல்.



செல்வன் சூரியபாலன் சுகந்தன்
Toulouse, France.
வயது: நான்கு
பொழுதுபோக்கு:
விளையாடுதல்,
வர்ணம் தீட்டுதல்,
தொலைக்காட்சி பார்த்தல்.



செல்வி சிவகுமார் சந்தோஷா
Reggio Emilia, Italy.
வயது: ஐந்து
பொழுதுபோக்கு:
கதைகேட்பது,
தமிழ் ஒலி கேட்பது,

வர்ணம் தீட்டுதல்.



www.tamilarangam.net

1 **செல்வி அகிலினி அகிலானந்தன்**

Toulouse, France.

**வயது: எட்டு**

**பொழுதுபோக்கு:**

**பாட்டுப் பாடுதல்,**


**சிறு கட்டுரை எழுதுதல்,**

**தொலைக்காட்சி பார்த்தல்.**



**Toulouse**

***TOULOUSE BUILDS ITS FUTURE IN SPACE***



எனது பெயர் அகிலினி அகிலானந்தன்

நான் பிரான்ஸ் தென் பகுதியில் உள்ள துலூஸ் நகரத்தில் வசிக்கின்றேன். துலூஸ் மிகவும் அழகான நகரம். இங்குதான் 'கரோன்' ஆறு பாய்கின்றது. உலகில் சிறந்த விமானம் இங்குதான் தயாரிக்கின்றார்கள். இங்கு எல்லா நாட்டு மக்களும் வசிக்கின்றார்கள்.

நன்றி

அகிலினி அகிலானந்தன்.


www.tamilarangam.net



பாராட்டுவோம்
பாலகரை,
படைப்புகளை
வரவேற்போம்,
பால்மனதைக்
குளிர வைத்து
பக்குவமாய்
ஊக்குவித்துப்
பாரினிலே
உயர வைப்போம்!







செல்வன் சிவகுமார் சிபோக்குமார்
Colomiers, Toulouse, France.
வயது: ஆறு
பொழுதுபோக்கு:
விளையாடுதல்,
கதை கேட்பது,
தொலைக்காட்சி பார்த்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நான் வளர்க்கும் பூனை

நான் வளர்க்கும் பூனையின் பெயர் ஜான்சி.

ஜான்சி கறுப்பும் வெள்ளையும் சேர்ந்த நிறமுடையது.

அதன் வால் அடர்த்தியாக, அழகாக இருக்கும்.



ஜான்சிக்கு நாயைக் கண்டால் பயம்.

அது சோறு சாப்பிடும், பால் குடிக்கும்.

அது மாமிசம் விரும்பிச் சாப்பிடும்.

ஜான்சிக்கு இரண்டு குட்டிகள் உள்ளன.

அவை வெள்ளை, கறுப்பு நிறமுடையவை.

கறுப்புக் குட்டியை என் நண்பனுக்கு கொடுக்கவுள்ளேன்.

ஜான்சி என்னைக் கண்டதும் ஓடி வந்துவிடும்.

*– அ. தனுஷன்*

செல்வன் அ. தனுஷன்
Toulouse, France.
வயது: ஏழு
பொழுதுபோக்கு:
விளையாடுவது,
கதை கேட்பது,
படம் வரைதல்.




www.tamilarangam.net

## தமிழர் பயன்படுத்தும் இசைக் கருவிகள் சில...


மேளம் – தவில்,
பறை,
கடம்,
மிருதங்கம்,
உடுக்கு,
கெஞ்சிரா,


நாதசுரம்
புல்லாங்குழல்
வீணை
யாழ்
ஆர்மோனியம்
சல்லாரி











www.tamilarangam.net



## எனக்குக் கவிதை பிடிக்கும்!

நான் பிரெஞ்சுமொழிப் பாடசாலையில் 6ᵉ வகுப்பு படிக்கின்றேன்.

எனக்குக் கவிதைகள் பிடிக்கும்.

வகுப்பில், பிரெஞ்சுமொழிக் கவிதை சொல்லிப் பரிசு வாங்கியுள்ளேன்.

தமிழில் கவிதைகள் பல அம்மா சொல்லித் தருவார்.

நானும் சில கவிதை வரிகள் தமிழிலும், பிரெஞ்சிலும் எழுதிப்பார்த்துள்ளேன்.

எனது வரிகள் சில பாருங்கள்!



### நச்சுப் பூச்சி

வீட்டில் பூச்சித் தொல்லையா?
ஒவ்வொரு பூச்சியாக நசுக்கி
ஒழிக்க முடியாது,
உருவாகியுள்ள இடத்திற்கு
நன்றாய் மருந்தடித்து அழி!

www.tamilarangam.net

## இன்றே செய்வோம்!

நாளை நல்ல பழம் தின்போம் – இன்று
அழுகல் விழுந்ததைத் தின்போம்
நாளை, நாளை, நாளை மறுநாள் – இப்படி
ஒவ்வொரு நாளும் அழுகல் தானா?
நல்லதை இன்றே செய்வோம்!

இப்படிச் சில வரிகள் சொன்னேன்.

அம்மாவின் உதவியுடன் எழுதியும் பார்த்தேன்.
இந்த வரிகள் உங்களுக்கும் பிடிக்கின்றனவா?

நான் பிரெஞ்சு மொழியில் நன்கு படிப்பதுடன் தமிழும் நன்கு படித்து வருகின்றேன்.

இரு மொழிகளிலும் கவிதைகள் படிக்க, எழுத எனக்கு விருப்பம்!

– இ. அநேகா.


' காந்தி உணவகம் '

Restaurant Indien

**' Le Gandhi '**

Spécialités Indiennes Tandooriés



39, rue de l'Industrie
31000 Toulouse
France.

Réservations:
**05 61 99 21 03**

www.tamilarangam.net

பயிற்சிப் பக்கம் :

# மழை






மேகம் கறுக்கிறது.

மின்னல், இடிமுழக்கம்,

மழை பொழிகிறது.

www.tamilarangam.net

மாலா, ஓவியா ஓடி வாருங்கள்.


வீட்டுக்குப் போவோம்.

சுழல்காற்று வீசுகிறது.

வெள்ளம், வெள்ளம்.

மழை வெள்ளம்,

ஆறாய் ஓடும் மழை வெள்ளம்.



மேகம் பொழியுது மழை
மின்னி முழங்குது இடி
வேகமாய் ஓடுது வெள்ளம்
வீசி அடிக்குது காற்று.

பின்வரும் சொற்களை வாசியுங்கள்.

மழை, மின்னல், முழக்கம், குளிர்காற்று, மேகம்,

இடி, வெள்ளம், புயற்காற்று, சூறாவளி, பொழியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| கறுக்கிறது | பொழிகிறது |
| காற்று | மின்னல் |
| மின்னுகிறது | வீசுகிறது |
| மழை | மேகம் |

பொருத்தமான சொல்வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புங்கள்.

1. மேகம் ------ ( கருக்கிறது, கறுக்கிறது )

2. மின்னல் ------ ( மின்னுகிறது, உதிக்கிறது )

3. மழை ------ ( பொழிந்தது, ஓடியது )

4. சூறாவளி ------ ( ஓடுகிறது, வீசுகிறது )

5. வெள்ளம் ------ என்று ஓடுகிறது. - ( கலகல, சலசல )

6. -- முழக்கம் முழங்கியது. ( அடி, இடி )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்வருவன சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுங்கள்.

1. ஆற்றில் வெள்ளம் உண்டு. ( )
2. மேகம் மழை பொழியாது. ( )
3. காற்று சுழன்று வீசுகிறது. ( )
4. மின்னல் மின்னும். ( )
5. வெள்ளத்தில் விளையாடுவது நல்லது. ( )


---

பார்த்து எழுதுங்கள்.

## அம்மா சேலை அணிவார்.

www.tamilarangam.net

# இவற்றின் பெயர்களை எழுதுக.




1 . . . . . . . . . . . . . . . . . . . .

௨ . . . . . . . . . . . . . . . . . . . .

3 . . . . . . . . . . . . . . . . . . . .

4 . . . . . . . . . . . . . . . . . . . .

5 . . . . . . . . . . . . . . . . . . . .

6 . . . . . . . . . . . . . . . . . . . .

7 . . . . . . . . . . . . . . . . . . . .

8 . . . . . . . . . . . . . . . . . . . .

9 . . . . . . . . . . . . . . . . . . . .

10 . . . . . . . . . . . . . . . . . . . .

www.tamilarangam.net

**வெற்றுக்கூடுகளில் பொருத்தமான எழுத்தை வைத்து நிரப்புங்கள்.**

1. தாமரை வளரும் இடம்.
2. நான் விரும்பி உண்பது.
3. இலையின் நிறம்.
4. காலையில் மலரும் மலர்.

| | | |
|---|---|---|
| கு | | ம் |
| | ழ | |
| ப | | சை |
| தா | ம | |

**நீங்கள் விரும்பும் பூவின் படம் வரைந்து அதன் பெயரை எழுதுங்கள்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சிறுவர் கதை:

## வாழ்வு மலர்ந்தது

முன்னொரு காலத்தில் ஒரு காட்டை அண்டிய நிலப்பரப்பில் குடியானவர் சிறு கூட்டமாக விவசாயம் செய்து சீவித்து வந்தனர்.

அங்குள்ள காட்டில் அரக்கர் கூட்டத்தினரும் பெருமளவில் வசித்தனர். அவர்களின் அரசியானவள் அவர்களுக்கேயுரித்தான குணங்களும் இரத்தப் பசியும் கொண்டவள்.

அரசியும், இரத்தப் பசிகொண்ட பெருமளவு அரக்கர் கூட்டமும் காட்டில் மிருகங்களை வேட்டையாடி அழித்தனர்.
தம் குழுக்களுக்குள்ளேயே மோதி பலரைக் கொன்று இரத்தப் பசியாறினர்.

www.tamilarangam.net

அத்தோடு நில்லாமல் அடிக்கடி குடியானவர் நிலப்பரப்பிலும் புகுந்து குடியானவரை விரட்டியடித்தனர். விளைநிலங்களை தம்வசமாக்கி நாசமாக்கினர்.

குடியானவர் சொத்துக்களைக் கொள்ளையிட்டனர். குடியானவர் பலரை அநியாயமாகக் கொன்றனர். சிலரை உயிருடன் எரித்தனர். இனந்தெரியாமல் மறைத்தனர்.

அரக்கரது அட்டகாசத்தைப் பொறுக்காது, குடியானவர் தம்மை தம்வழியே தம்நிலப்பரப்பில் அமைதியாய் வாழவிடும்படி அவர்களுடன் பலமுறை அன்பாகப் பேசிப்பார்த்தனர். எதுவுமே அரக்கர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

காட்டில் மிருகங்களும் அழிந்துவந்தன. அரக்கர் சிலரும் தமக்குள் மோதி அழிந்தனர். கிராமத்தில் குடியானவரும் தொடர்ந்து அழிக்கப்பட்டு வந்தனர். விவசாயமும் அழிக்கப்பட்டே வந்தது.

இறுதியில் குடியானவர் ஒற்றுமையாக, ஒன்றுதிரண்டு அரக்கர் கூட்டத்தின் அட்டகாசத்தையும், அடக்குமுறையையும் எதிர்ப்பதே வழியெனக் கண்டனர். வீரமும் தியாகவுணர்வும் கொண்ட குடியானவர் முன்னணிக்கு வந்து போராடினர்.

முரட்டு உடலும், இரக்கமற்ற செயல்களும் கொண்ட பெருமளவு அரக்கர் கூட்டத்தோடு, குடியானவர் உபாயங்கள் பல வகுத்து மோதினர்.

www.tamilarangam.net

தங்கள் நிலப்பரப்பின் எல்லைகளில் பெரிய பொறிக்கிடங்குகளை அமைத்து அரக்கர்களை வீழ்த்தினர். மரங்களில் ஆயுதங்களைப் பொருத்தி தூரத்தே நின்று அவற்றை ஏவினர்.

தங்கள் நிலப்பரப்பில் சிறிது தூரம் அவர்களை வரவிட்டு பின்வாங்கிப் பின்னர் அவர்கள் மதுமயக்கத்தில் இருக்கும்போது சுற்றிவளைத்துப் பாய்ந்து தாக்கினர்.

இப்படிப் பலவித உபாயங்களைக் கையாண்டு அரக்கியையும் அரக்கர் பெருங்கூட்டத்தையும் குடியானவர் அழித்தனர். எஞ்சிய அரக்கர் உயிர்தப்பிப்பிழைத்தோம் எனக் காட்டில் நெடுந்தூரம் ஓடித்தப்பினர்.

குடியானவர் தம்நிலப்பரப்பில் நிம்மதிப் பெருமூச்சுவிட்டு மகிழ்ச்சியாய் வாழ்ந்தனர்.

- *அசலை*



www.tamilarangam.net


□ பாடசாலை மாணவர் முதல்
பல்கலைக்கழகப்
பேராசிரியர் வரை
குடும்பப் பெண்கள் முதல்
கலை இலக்கியப்
படைப்பாளிகள் வரை
தேடிவரும் தமிழ்ப் புத்தகசாலை

# தமிழாலயம்

□ இந்திய, இலங்கைப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்

□ கவிதைத் தொகுப்புகள், சிறுகதைகள், நாவல்கள்

□ மற்றும் அறிவியல் நூல்கள் யாவற்றிற்கும்

**THAMILALAYAM**

39 Bld. de la Chapelle,
75010 Paris.

**Tel: 01 42 05 71 49 Fax: 01 42 05 71 39**

www.tamilarangam.net

பெற்றோர் பக்கம்:

## நாம் தமிழர்
## நமது அடையாளம் தமிழ்!

பெற்றோர்களே,

உங்கள் பிள்ளைகள் சிலர் புலம்பெயர்ந்து வாழும் நாட்டில் பிறந்திருக்கலாம். சிலர் ஈழத்தில் பிறந்திருக்கலாம்.

அவர்கள் இங்கு வாழும் நாட்டின் மொழியில் கல்வி கற்கிறார்கள். அவர்கள் பாடசாலையில் அந்த மொழியிலேயே எல்லோருடனும் பேசுகிறார்கள். பொது இடங்களில் நண்பர்களுடனும், மற்றையோருடனும் அந்த மொழியில் தான் கலந்துரையாடுகிறார்கள்.

ஆனால் வீட்டில் எந்த மொழியில் பேசுகிறார்கள்?

அரபு நாட்டவர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில், தமது வீடுகளில் தமது மொழியிலேயே பேசுகின்றனர். தமது நாட்டவர் ஒருவரைக் காணும்போது தமது முறைப்படி வணக்கம் கூறி, தமது மொழியில் பேசுகின்றனர். மற்றும் பல நாடுகளைச் சேர்ந்த இனத்தினரும் அவ்வாறே நடந்துகொள்கின்றனர். பார்த்திருப்பீர்கள்! கேட்டிருப்பீர்கள்!

ஆனால் நாம்?

நாம் தமிழர்!

www.tamilarangam.net

நமது அடையாளம் தமிழ்!
நாம் வாழும் நாட்டில் பிரசாவுரிமை பெற்றுக்கொள்ளலாம். ஆனால் நமது தோற்றத்தை மாற்றிக்கொள்ள முடியுமா?

பல்லாண்டுகளுக்கு முன்னர் இடம்பெயர்ந்து வந்து வாழும் மொறிசியஸ், ரியுனியன், தென்னாபிரிக்கா நாட்டுத் தமிழ்மக்களைப் பாருங்கள்.
அவர்கள் தாம் வாழும் நாட்டு மொழியினை நன்கு பேசலாம்.
ஆனால் அவர்கள் தோற்றம்?
அவர்கள் பலர் தம்மைத் தமிழர் என அடையாளப்படுத்திட, தமிழைப் பேசிட முடிவதில்லை.

எந்த இனத்தவர் என அடையாளப்படுத்திட நமக்கு மொழி தேவை!

நாம் தமிழர் என அடையாளப்படுத்திட தமிழ் எமக்கு வேண்டும்.

உங்கள் பிள்ளைகளோடு வீட்டில் தமிழிலேயே பேசுங்கள்.

தமிழரோடு தமிழிலேயே உரையாட ஊக்கப்படுத்துங்கள்.
தமிழ்ப் பத்திரிகை, சஞ்சிகை படிக்கக் கொடுங்கள்.

நாம் பிறந்த, தாய் நாட்டு மண்ணில் வாழ்ந்த இனிமை, சுகம், சுவாத்தியம் போன்ற நல்லனவற்றையெல்லாம் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறுங்கள்.

பாடசாலையில் பாடங்களைப் பொறுப்புடன் படிக்குமாறு புத்திமதி கூறுங்கள்.

www.tamilarangam.net

நவீன விஞ்ஞானக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி என்பனவற்றில் கவனமெடுத்துக் கற்குமாறு கூறுங்கள்.

கணனியில் கற்பதை ஊக்கப்படுத்துங்கள்.

கல்விக்கெனக் கேட்பவற்றை வாங்கிக் கொடுங்கள்.

ஐந்துக்கு மேற்பட்ட மொழிகளை ஒரு பிள்ளை கற்றுக்கொண்டாலும் தீங்கு எதுவும் ஏற்படாது, நன்மையேயாகும் என மனோநல வல்லுனர்கள் கூறியுள்ளார்கள்.

தனித்துவம், கலாச்சாரம், மொழி, பண்பாடு இவை ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியவை!

தமிழை எமது பிள்ளைகள் கற்க வேண்டிய தேவையுள்ளதா என்பது விவாதத்திற்குரியதல்ல!
உணர்வோடு கூடியது!
அடையாளப்படுத்திட, தன்மானத்துடன் வாழத் தேவையானது!

தமிழால், புகலிடத் தமிழ்மக்கள் தமக்குள் ஓர் இணைப்பையும், பற்றுதலையும் வளர்த்திட வேண்டும்.

தளைகள் எல்லாம் தகர்த்தெறியப்பட்டு, எல்லாரும் எல்லாமும் பெறுகின்ற, ஒரு சுதந்திரப் பூமியில் தமிழர் தலைநிமிர்ந்து வாழ்ந்திட வழிசெய்திட வேண்டும்!

முன்னேறும் உலக மக்கள் சமுதாயத்துடன் தமிழனும் தன்னை உயர்த்திட வேண்டும்!

*

www.tamilarangam.net



**சிவமலர்:**

*வணக்கம், திரிபுரசுந்தரி.*

**திரிபுரசுந் தரி:**

*என்னை சுந்தரி எண்டு கூப்பிடாதே!*
*நாகரிகமில்லாத பெயர்.*
*எனக்குப் பெயர் நத்தலி.*

**சிவமலர்:**

*ஓ... ... நான் மறந்திட்டன்.*
*நீ நஷனலிற்றி எடுத்திற்றாய்...*
*அது தான் பெயரையும் மொட்டா மாத்திற்றாய்.*
*அதெல்லாம் சரி... இப்ப பிறந்த பிள்ளைக்கு*
*என்ன பெயர் வைச்சிருக்கிறாய்?*

**திரிபுரசுந் தரி:**

*மொட்டான பெயர் தான்... ... சகாரா...*

**சிவமலர்:**

*சோக்கல்லோ... ... சகாராவோ ... ...*
*மொட்டான பெயர் தான் ...*
*சிந்திச்சுத் தான் வைச்சிருக்கிறாய் போல...*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**திரிபுரசுந்தரி:**

*ஓ... ... நானும் என்ர மறி பியரும்*
*நல்லா யோசிச்சுத் தான்*
*இந்தப் பெயர் வைச்சனாங்கள்.*

**சிவமலர்:**

*நான் உமக்கு ஒரு விஷயம் சொல்லுறன் கேளும்.*
*அமெரிக்காவில ஆருக்கும் எழுதிக்கேளும்,*
*உம்மிட தோலின்ர நிறத்தை மாத்திறதுக்கு*
*ஏதும் மருந்து இருக்கா எண்டு.*

**திரிபுரசுந்தரி:**

*... ஆ... ... ?*

**- தி. சந்திரா**
**பாரிஸ்.**

---

## தமிழா! நீ பேசுவது தமிழா...?



தமிழா!
நீ
பேசுவது தமிழா?

அன்னையைத் தமிழ்வாயால்
'மம்மி' என்றழைத்தாய்...
அழகுக் குழந்தையை
'பேபி' என்றழைத்தாய்...
என்னடா தந்தையை
'டாடி' என்றழைத்தாய்...
இன்னுயிர்த் தமிழை
கொன்று தொலைத்தாய்...

தமிழா!
நீ
பேசுவது தமிழா?

*- காசி ஆனந்தன்.*

www.tamilarangam.net

## அவுஸ்திரேலியாவிலிருந்து பிரபல எழுத்தாளர் மாத்தளை சோமு வாழ்த்துகிறார்!

ஆசிரியர்,
' பரிசு '
பிரான்ஸ்.

புலம் பெயர்ந்த தமிழர்களின் சிறுவர்களுக்காகப் ' பரிசு ' என்ற பெயரில் ஓர் இதழ் விரைவில் தொடங்க இருப்பதாக அறிந்தேன்.

ஏற்கனவே தாங்கள் ஈழத்திலும், ஐரோப்பாவிலும் சிறுவர் இலக்கியத்தை முன்னெடுத்து குட்டிக் கதைகள், பாலர் பாடல், பாலர் கதைகள் என்பனவற்றை எழுதிப் புகழ்பெற்றதோடு, அனுபவம் வாய்ந்த நீங்கள், இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பது பாராட்டத்தக்கது.

ஒரு சமூகம் தலைநிமிரக் குழந்தைகள் இலக்கியம் தரமாகவும், சிறப்பாகவும் இருக்கவேண்டும்.
அந்த வகையில் இந்த ' பரிசு ' சிறுவர் இதழ் புலம்பெயர்ந்த நாடுகளில் சிறுவர் இலக்கியத் தேவையை நிறைவு செய்யும் என நம்புகின்றோம்.

உங்களின் முயற்சி சிறக்க எனது அன்பான வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

– மாத்தளை சோமு

www.tamilarangam.net

# காவலூர் ஜெகநாதன் நினைவு அறக்கட்டளை



## காவலூர்ஜெகநாதன்

சுப்பையா ஜெகநாதன் என்ற இயற்பெயரைக் கொண்ட காவலூர் ஜெகநாதன், 1955 ஜனவரி 17ம் திகதி காவலூரின் கரம்பொன் என்ற கிராமத்தில் பிறந்தவர்.

1975ல் தமது 20வது வயதில் எழுத ஆரம்பித்த காவலூர் ஜெகநாதன், தான் இறக்கும் வரை (1985) பத்து ஆண்டுகளில் முன்னூறுக்கும் அதிகமான சிறுகதைகளையும், பல நாவல்கள், கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இந்த பத்து ஆண்டுகாலத்தில் ஈழத்தில் நடைபெற்ற பல சிறுகதைப் போட்டிகளில் பரிசுகளைப் பெற்ற இவர், பரிசுஎழுத்தாளர் என்றே இலக்கிய உலகில் அழைக்கப்பட்டவர்.

கமத்தொழில் திணைக்களத்தில் உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தராக பணியாற்றி வந்த அவர், 1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து தமிழகத்தில் சென்று வாழ்ந்துவந்தார். 1985ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி இனந்தெரியாத ஆயுதக்குழு ஒன்றினால் படுகொலை செய்யப்பட்டார்.

## அறக்கட்டளை

காவலூர் ஜெகநாதனின் நினைவாக அவர் குடும்பத்தினரால் இந்த அறக் கட்டளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறக்கட்டளைக்கென, பத்துலட்சம் இலங்கை ரூபாக்கள் அன்பளிப்பாக அவர் குடும்பத்தினரால் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதி இலங்கையில் கிறிலண்ட் வங்கியில் நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளது. இந்த நிதி எக்காலத்திலும் அறக்கட்டளையின் ஆளுநர்களின் சொத்தாகவே இருக்கும்.

ஜெகநாதனின் படைப்புக்கள் தொடர்ந்து வெளியிடப்படும்போது, அதனால் கிடைக்கும் நிதியும் இந்த அறக்கட்டளைக்கே சேர்க்கப்படும்.

அறக்கட்டளையின் ஆளுநர்களில் ஒருவரான சபாபதி சுப்பையா குகநாதன் அவர்களால் நடாத்தப்பட்டுவரும் ரஜனி பதிப்பகம், காவலூர் ஜெகநாதன் நூல்களை தொடர்ந்து வெளியிட்டு வரும். அதன் மூலம் கிடைக்கும் நிதி முழுவதும் அறக்கட்டளைக்கே வழங்கப்படும்.

வைப்பிலிடப்பட்டுள்ள பணத்துக்கான வட்டியை மட்டுமே எக்காலத்திலும் செலவு செய்வதற்கு அறக்கட்டளைக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net

# ஜெகநாதன் நினைவுப்பரிசு

அறக்கட்டளை சார்பில் வருடந்தோறும் காவலூர் ஜெகநாதன் நினைவாக வருடமொன்றுக்கு ஒரு பரிசு வழங்கப்படும்.
ஜெகநாதன் அதிகம் அக்கறை செலுத்திய சிறுகதைத் துறையில் அவர் நினைவுப்பரிசு அமையும்.
ஒவ்வொரு ஆண்டும் வெளிவந்த சிறுகதைகளில் மிகச் சிறந்த ஒரு சிறுகதைக்கு 50 ஆயிரம் இலங்கை ரூபா பரிசாக வழங்கப்படும்.
பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் சிறந்த சிறுகதையை ஒவ்வொரு ஆண்டும் மூன்று பிரமுகர்கள் கூட்டாக ஆராய்ந்து பரிசுக்குரிய சிறுகதையைத் தெரிவுசெய்வார்கள்.
ஈழத்து எழுத்தாளர்கள் (அவர்கள் எந்த நாட்டுக்கு புலம்பெயர்ந்திருந்தாலும்)

மட்டுமே பரிசுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்படுவார்கள்.

# சில்லையூர் செல்வராசன் நினைவுப்பரிசு

மறைந்த பல்கலைவேந்தர், கவிஞர் சில்லையூர் செல்வராசன் நினைவாகவும், அறக்கட்டளை வருடம்தோறும் நினைவுப்பரிசு ஒன்றை வழங்கும்.
ஒவ்வொரு ஆண்டும் வெளிவந்த கவிதைகளில் மிகச் சிறந்த ஒரு கவிதைக்கு 50 ஆயிரம் இலங்கை ரூபா பரிசாக வழங்கப்படும்.
பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்த கவிதைகளில் சிறந்த கவிதையை ஒவ்வொரு ஆண்டும் மூன்று பிரமுகர்கள் கூட்டாக ஆராய்ந்து பரிசுக்குரிய கவிதையைத் தெரிவுசெய்வார்கள்.
ஈழத்து கவிஞர்கள் (அவர்கள் எந்த நாட்டுக்கு புலம்பெயர்ந்திருந்தாலும்) மட்டுமே பரிசுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்படுவார்கள்.

## 1998ம் ஆண்டுக்கான பரிசுக்காக கடந்த ஆண்டில் வெளிவந்த சிறுகதைகள், கவிதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

கதைகள், கவிதைகள்( அவை பிரசுரமான பத்திரிகைகள் சஞ்சிகைகளுடன்) அனுப்பவேண்டிய முகவரி:

டாக்டர் வி.ரி. இளங்கோவன்,
செயலாளர்,
காவலூர் ஜெகநாதன் நினைவு அறக்கட்டளை,
**51, Rue de la Parabole,**
**95800 Cergy, France.**

www.tamilarangam.net

**'பரிசு' பெற்றுக்கொள்ளவும் மற்றும்**
**எமது வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ளவும்**
**C D C. பிரதிநிதிகளை நாடுங்கள்.**

கனடா:
செ. நடனசபாபதி
தொ. இல: 416 928 3043

இத்தாலி:
ம. சிவகுமார்
522 921 873

பிரான்ஸ் – பாரிஸ்:
தோழர் எஸ். சுரேந்திரன்
01 49 37 24 92

ஜேர்மனி:
இ. சம்பந்தன்
021 028 735 18

ஒல்லாந்து:
இ. பாஸ்கரன்
06 55 75 64 93

இ. நந்தகுமாரன்
தொலைபேசி / தொலைநகல்
இல: 023 368 305 83

<u>வெளிவந்துவிட்டது:</u>



- எழுச்சிக் கவிஞர்
வி. ரி. இளங்கோவனின்
தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள்
அவரது குரலில் ஒலிக்கின்றன.

ஒலித்தட்டு
கரும்பனைகள் (C D)

தொகுத்தளிப்பவர்
ரி. ஆர். ரி. தர்ஷன்.

தொடர்புகளுக்கு:
CDC. EUROPE ORIENT.
Tél. : 05 61 63 49 69 Fax: 05 61 63 49 69
05 61 55 00 13



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரைவில் வெளிவருகிறது!



# டானியல்

**மக்கள் கலை இலக்கிய மஞ்சரி**

- மக்கள் எழுத்தாளர் கே. டானியல் நாமம் கொண்டு மலர்கிறது.
- மண்ணை நேசிக்கும் மனிதாபிமானமிக்க மக்கள் இலக்கியப் படைப்பாளிகளே படைப்புகள் தந்துதவுங்கள்!
- அன்று டானியலோடு, அரசியல், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், மக்கள் கலை இலக்கியப் பெருமன்றம் ஆகியவற்றின் செயற்பாடுகளில் பங்கெடுத்துக்கொண்டவர்கள், தோழமையோடு பழகியவர்கள், தெரிந்து கொண்டவர்கள், கடிதத் தொடர்புடையவர்கள், அபிமானமிக்கவர்கள் எங்கு வாழ்ந்தாலும்; அவரோடுள்ள உங்கள் அனுபவங்களை எம்மோடு பதிவுசெய்து கொள்ளுங்கள். ஓர் உன்னத படைப்பாளியை, அரசியல், சமூக விடுதலைப் போராளியை, மனிதாபிமானமிக்க மனிதனை அடுத்த சந்ததியும் நன்கு அறிந்து கொள்ளட்டும்.

தொடர்புகளுக்கு:
C D C. EUROPE ORIENT.

5, RUE DENFERT- ROCHEREAU
31000 TOULOUSE
FRANCE.

**Tél. : 05 61 63 49 69**
**05 61 55 00 13**

**Fax: 05 61 63 49 69**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# THIRUPPATHY Fashion House

திருப்தியளிக்கும் ஆடைத் தேர்வுக்கு

## திருப்பதி

பட்டுப் புடவைகள்

நவீனரக உடுபுடவைகள்

ஆடவர், சிறுவர்க்கான

ரெடிமேட் ஆடைகள்

யாவற்றையும்

திருப்தியோடு

பெற்றுக்கொள்ள...



**திருப்பதி பெஷன் ஹவுஸ்**

203, rue du Fg. St. Denis

75010 Paris

Tél.: 01 40 37 56 44

Fax: 01 42 09 95 80

Mº: La Chapelle ou Gare du Nord

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்